**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.407/2015 வா.சா.1 ரத்தினகுமார்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 20.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி 1ம் பிரதிவாதி மீது அ.வ.எண். 75/2005 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அவ்வழக்கு எனக்கு ஆதரவாக தீர்ப்பானதால் அதே நீதிமன்றத்தில் EP.101/2006 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த நிறைவேற்று மனுவில் 2 ம் பிரதிவாதி தனக்கு அச்சொத்தில் மூன்றில் ஒரு பங்கு பாத்தியம் உள்ளதாக மனு தாக்கல் செய்து அது 2 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக உத்தரவு ஆனது என்றால் சரிதான். அதனால் மேற்படி நிறைவேற்று மனுவில் மேற்படி சொத்தில் மூன்றில் இரண்டு பங்கு மட்டுமே எனக்கு கிரையம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) அதன் பின்னர் கிரையம் ஏற்பட்ட சொத்திற்கு சுவாதீனம் கோரி EP. 88/2013 மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த நிறைவேற்று மனுவில் எனக்கு தனி உடைமை கொடுக்காமல் அடையாள உடைமை மட்டும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். EP.101/2006 ல் எனக்கு எழுதி கொடுக்கப்பட்ட வா.சா.ஆ. 8 கிரைய ஆவணப்படி வழக்கு ஏ அட்டவணைச் சொத்தில் மூன்றில் இரண்டு பாகம் மட்டுமே எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3) நான் என் சாட்சிய வாக்குமூலத்தில் 11 வது பத்தியில் கடந்த 2014 ஏப்ரல் முதல் வாரத்தில் பாகப்பிரிவினை கோரியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு

தாக்கல் செய்ய வழக்குமூலம் இல்லை என்றும் வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலம் தவறு என்றும் சொன்னால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/- (மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி